சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 40/2018

பெயர் திரு. கமலகண்ணன் த/பெ. நீலமேகம் நாள். 20.08.2025

**வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அமிர்தம்மாள் என் தாயார். என் தாயாரால் இந்நீதிமன்றத்திற்கு வர இயலும். தற்பொழுது சாட்சி மாற்றி அவரால் வர இயலாது என்று கூறுகிறார். வழக்குச் சொத்தைப் பற்றி என் தாயாருக்குதான் முழுமையாகவும், நன்றாகவும் தெரியும் என்றால் எனக்கும் தெரியும். எங்களுடைய சொத்து என்று புல எண்.340/22 என்று கூறுகிறேன் என்றால் சரிதான். யார், யார் சொத்துக்களை அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் பெயில் 1994ம் ஆண்டு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். வழக்குச் சொததிற்கு இதுவரை பட்டா வழங்கப்படவில்லை என்றால் சரிதான். புல எண்.340/22 என்பது காலி இடம் என்று சொன்னால் சரிதான். அ பதிவேட்டில் வழக்குச் சொத்து குறித்து காலி இடம், சர்க்கார் இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ பதிவேடு படி அது சர்க்காருக்கு உரிமை என்றால் சரிதான். நான் ஆவணம் வைத்துள்ளேன். நானும், என் தாயாரும் வழக்கு அ. பட்டியல் சொத்து குறித்து பட்டா கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளோம்.

2) ஏ பட்டியல் சொத்திற்கு கிரய ஆவணத்தைத் தவிர வேறு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் வீட்டு வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். பழைய புல எண்.292 என்று சொன்னால் சரிதான். வழக்கு ஏ பட்டியலுக்கு உண்டான ஆவணம் தான் வா.த.சா.ஆ.1 என்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான். புல எண்.340/22 காலி இடம் என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் வீடு ஏதும் இல்லை என்றால் ஏற்கனவே வீடு இருந்தது.

சுமார் 25 வருடங்களாக காலி இடம் என்றால் 5, 6 வருடங்களாகத்தான் காலி இடமாக உள்ளது. அதில் வீடு இருந்ததாகவும், அது இடிந்துவிட்டதாக வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குரையில் 1994ம் வருடம் வழக்கு ஏ பட்டியலில் வீடு ஏதும் இல்லை என்பதற்காக பட்டா வட்டாட்சியரால் மறுக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.3 2009ம் வருடத்திற்குரியது என்றால் சரிதான். 1994ல் வீடு இல்லை என்றபொழுது 2009ல் அதில் வீடு இருக்க வாய்ப்பில்லை என்றால் பட்டா வாங்குவதற்காக பின்னர் வீடு கட்டினோம். இது குறித்து வழக்குரையில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

3) புல எண் 340/16 ல் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கு பிரதிவாதி பெயரில் பட்டா உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. இல்லாத வீட்டிற்கு பி பட்டியல் வழியாக வழி கோர இயலாது என்றால் பிரதிவாதி வழி விடவிலலை என்பதால் நான் வீடு கட்டவில்லை. பிரதிவாதியின் சிறிய தகப்பனார் ஏற்கனவே வழிவிட்டிருந்தார். அதன் மூலம் வீடு கட்டினோம். நான் வழக்குச் சொத்தில் வீடு கட்டியது கிடையாது என்றாலும், அதனை அனுபவம் செய்தது கிடையாது என்றாலும் சரியல்ல. புளியமரத்தின் கிளைகள் 1ம் பிரதிவாதியின் வீட்டின்மேல் விழுகிறது என்றால் என் அனுமதியின் பேரில் 1ம் பிரதிவாதி அதனை வெட்டிவிட்டார். பி பட்டியல் சொத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டிவிட்டார். அவர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே கட்டிவிட்டார். அவ்வாறு வழியில் வீடு கட்டியதை நீக்கரவு செய்து உத்தரவு பிறப்பிக்க வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அதற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பி பட்டியல் சொத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக வட்டாட்சியரிடம் மனு அளித்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த மனுவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ளது. உண்மையில் ஆக்கிரமிப்பு செய்திருந்தால் வட்டாட்சியர் நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல.

4) 1ம் பிரதிவாதி புளியமரத்தை வெட்டியதாக கூறுவதற்கு காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் எந்த இடத்தில் புளிய மரம் இருந்தது என்றும், புளியமரம் பற்றியே குறிப்பிடவில்லை என்றாலும் சரியல்ல. புளிய மரம் எனக்கு உரிமையானது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி 2018ல் புளிய மரத்தை வெட்டினார். புளிய மரத்தை வெட்டியதாக கூறுவதற்கு புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் பிரதிவாதி புளிய மரத்தை அத்து மீறி வெட்டியதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள 2வது பரிகாரம் செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1ஐ வைத்து வழக்கு புல எண்தான் என்னுடைய சொதது என்று கூற இயலாது என்றால் சரியல்ல. அது என் சிறிய பாட்டனாரின் சொத்தாகும். வா.த.சா.ஆ.1ன் படி கிரயம் வாங்கியது 15 சென்ட் என்றால் சரிதான். ஆவணத்திற்கு ஏற்றவாறு வழக்கு தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல. வழக்கு குறித்து எவ்வித முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு 4 நாட்களுக்கு முன்பு மரத்தை வெட்டிவிட்டார்கள். மரத்தின் மதிப்பை மதிப்பீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்யவில்லை. ரூ.30,000/- நஷ்ட ஈடு கோருவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரியல்ல. புல எண். 340/17 வழியாக பயன்படுத்துவதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.